1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்டதற்கான விடை, இந்த அவையின் இறுதியில் தீர்ப்பாக வழங்கப்படும்.

4. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் மாற்று தலைவர்களாக (Panel of Chairman) நியமிக்கிறேன் :

(1) திரு. ந. இராமச்சந்திரன்
(2) திரு. அ. இராசேந்திரன்
(3) திருமதி எஸ். பி. சற்குணம்
(4) திரு. ரா. சொக்கர்
(5) திரு. வி. கே. சின்னசாமி
(6) திரு. சோ. அழகர்சாமி

(ஆ) பணியிலிருந்து ஓய்வுபெற்ற பேரவைச் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களைப் பாராட்டி 12–5–1990 ஆம் நாளன்று அவை நிறைவேற்றியுள்ள தனித் தீர்மானத்திற்கு அவர்கள் நன்றி தெரிவித்து எழுதியுள்ள கடிதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : பேரவையில் 12–5–1990 ஆம் நாளன்று நிறைவேற்றப் பட்ட தீர்மானம் குறித்து, முன்னாள் செயலாளர் திரு. சி. கு. இராமசாமி அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன் ;

''பேரன்புடையீர்,

வணக்கம். தங்களது 23–5–1990 ஆம் நாள் கடிதமும், சட்டமன்றப் பேரவையில் என்னுடைய பணியைப் பாராட்டி, 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் கிடைக்கப் பெற்றேன்.

சட்டமன்றத் துறையில் நான் ஆற்றிய 35 ஆண்டுக்கால பணியைப் பாராட்டி நிறைவேற்றியுள்ள அரசினர் தீர்மானத் திற்கு என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக்